அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 159/2017 RCOP:/

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.வா.சா.1 21.01.2025

பெயர் நவணித கிருஷ்ணன் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

குறுக்கு விசாரணை:–

3. 1 ம் வாதி நிருவனத்திற்கும் 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால் இரண்டும் வெவ்வேரு நிறுவனம் ஆகும். இருநிறுவனங்களில் சர்வீஸ், சொலியுசன் என்ற வார்தையை தவிற்து மற்ற அனைத்தும் ஒரே பெயர் தான் என்று சொன்னல் சரிதான். 3 ம் பிரதிவாதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டாத பாட்நர் சிப் நிறுவனம் . 1 ம் வாதியும் 3 ம் பிரதிவாதியும் நிறுவனங்களும் பதிவு செய்யப்படடாதது ஏன், அது ஒரு ஏமாற்றும் யுத்தி என்று சொன்னால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி நிறுவனத்தில் நானும் 2 ம் பிரதிவாதியும் பாட்நர்கள் ஆவோம்.

4. 3 ம் பிரதிவாதி நிறுவனத்தை மார்ச் 2014 ல் நிறுவினோம் தேதி ஞாபகம்

இல்லை. 1ம் வாதியின் நிறுவனத்தை கலைத்ததற்கும் 3ம் பிரதிவாதி நிறுவனத்தை நிறுவியதற்கும் இடையே 2 மாத இடைவேளி இருக்கும். 3ம் பிரதிவாதி நிறுவத்தின் முதலீடு 20 லட்சம் . அந்த முதலீடானது 1ம் வாதி நிறுவனத்தில் இருந்து வந்தது என்று சொன்னால் நாங்கள் சம்பளம் எடுத்திருந்தோம் . அந்த சம்பளம் ரூபாய் 40 ஆயிரம் ஆகும் . நானும் 2ம் பிரதிவாதியும் தனித்தனியே ரூபாய் 40 ஆயிரம் சம்பளம் வாங்கினோம்.

5. 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் முகவரி பிளார் எண் 4 , வெள்ளாளர் தெரு இ ஸ்கூல் ரோடு, அயனம்பாக்கம், சென்னை 95. அதற்கு ஜீஸ்டி சான்று உள்ளது. அதற்கு வருமான வரி 2017 ல் இருந்து கட்டுகிறோம். எங்களது ஆடிட்டர் திரு.நாரயனசாமி. எங்கள் நிறுவத்திற்கும் 1ம் வாதி நிறுவனத்திற்கும் 1 வாதி தான் ஆடிட்டர் இருந்தார். பி.வா.சா.ஆ.3 ஆவணம் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது என்னால் குறியீடு செய்யப்பட்டு உள்ளது அதன் அசல் வாடிக்கையாளரிடம் இருக்கும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் அனுப்பவில்லை.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)